| MSSRF Science for Sustainable Development | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் : | மதுரை | காலம் : | 15/03/2023 | முதல் | 19/03/2023 |
| | அறிக்கை எண் : | 021/ 2023 | வெளியீட்டு நாள் : | 14/03/2023 | | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (09.03.2023 முதல் 13.03.2023) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 19-03-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 09/03 | 10/03 | 11/03 | 12/03 | 13/03 | தேதி | நாள்-5 15/03 | நாள்-5 16/03 | நாள்-5 17/03 | நாள்-5 18/03 | நாள்-5 19/03 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 1 | 1 |
| 36 | 35 | 35 | 35 | 36 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 36 | 36 | 35 | 35 | 35 |
| 23 | 23 | 23 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 22 | 22 | 21 | 21 | 21 |
| 3 | 5 | 4 | 4 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 1 | 2 | 3 | 4 | 5 |
| 71 | 80 | 70 | 69 | 77 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 80 | 80 | 80 | 80 |
| 40 | 46 | 37 | 46 | 39 | | 30 | 30 | 30 | 40 | 40 |
| 7 | 8 | 11 | 13 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 4 | 6 | 6 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | தென் கிழக்கு | **காற்றின் திசை** | தென்மே மேற்கு | தென்மே ற்கு | தென்மே மேற்கு | **வட** மேற்கு | வடக்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மார்ச் 18 மற்றும் 19ம் தேதி மிக லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 35°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 21°-22° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 4 முதல் 6 கி.மீ வேகத்தில், தென்மேற்கு, வடமேற்கு, மற்றும் வடக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## இடி மின்னல் எச்சரிக்கை:

வரும் 17.03.2023 முதல் 19.03.2023 தேதி வரை தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது. கால்நடைகளை பாதுகாப்பான இடங்களில் கட்டி வைக்கவும். *கால்நடை வளர்க்கும் விவசாயிகள் கோடை காலங்களில் ஏற்படும் தீவனப்பயிர்கள் பற்றாக்குறையினை தவிர்க்கும் வகையில் பாசன வசதியுள்ள விவசாயிகள்* 10 *சதவீத நிலத்தில்* கம்பு நேப்பியர் போன்ற தீவனப்பயிர்களை சாகுபடி செய்யலாம். *இடி மின்னலில் இருந்து தங்கள் கால்நடைகளை பாதுகாக்கும் பொருட்டு கழுத்தில் கட்டியுள்ள உலோக மணிகளை அகற்றிவிடவும்.*

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : தென்னை, பப்பாளி,** கால்நடை.

**தென்னை:**

- தென்னையில் மாவுப்பூச்சி கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு ஒரு லிட்டர் என்ற அளவில் வேப்ப எண்ணையுடன் 100 மிலி ஒட்டும்பசை கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**பப்பாளி:**

- பப்பாளி பயிரில் பச்சை அசுவினி கட்டுப்படுத்த, 10 லிட்டர் தண்ணீருக்கு 6 கிராம் என்ற அளவில் அசிடாமாபிரிடு மருந்தினை கலந்து தெளிக்க வேண்டும்.

கால்நடை:

- தற்போது நிலவும் வெப்பமான சூழ்நிலையிலிருந்து தங்களது கால்நடைகளை காப்பாற்ற பகல் நேரங்களில் அரை மணி நேரத்திற்கு ஒரு முறை அவற்றின் உடம்பில் தண்ணீரை பீய்ச்சி அடிக்கவும்.
- நிழற்ப்பாங்கான இடத்தில் 24 மணி நேரமும் போதுமான அளவு குடி நீரினை குடிப்பதற்காக வைக்கவும்.
- தங்களது கால்நடைகளை அதிகாலை, மாலை மற்றும் இரவு நேரங்களில் உணவு எடுத்துக்கொள்ளப் பழக்கப்படுத்துங்கள்.
- அதிகாலை மற்றும் அந்திமாலை நேரங்களில் மட்டும் மேய்ச்சலுக்கு விடுவதன் மூலம் கடுமையான வெப்பத்திலிருந்து தங்களது கால்நடைகளை பாதுகாக்கலாம்.